1978 மார்ச் 3]

மூடப்பட்டுள்ள ஸ்டுடியோக்கள்.

* 372 வினா—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது தமிழ்நாட்டில் எத்தனை ஸ்டுடியோக்கள் மூடப்பட்டுள்ளன ?

(ஆ) அதனால் எத்தனை பேர் வேலை இழந்துள்ளனர் ?

(இ) மூடிய ஸ்டுடியோக்களைத் திறப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மூன்று.

(ஆ) சுமார் 530 பேர்.

(இ) மூடிய ஸ்டுடியோக்களைத் திறக்க அரசினரிடம் நடவடிக்கை ஏதும் இல்லை.

திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த ஸ்டுடியோக்களில் வேலை செய்த தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு, வேலை இழந்திருக்கிறார்களே, அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அப்படி ஒரு யோசனை இல்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, ஏன் இந்த ஸ்டுடியோக்கள் மூடப்பட்டன ? எதற்காக மூடியிருக்கின்றன என்ற விவரத்தை அமைச்சரவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, 3 ஸ்டுடியோக்களும் 1975-லேயே மூடப்பட்டுவிட்டன.

* 373 வினா— திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோல்டன் சினி ஸ்டுடியோ, கோல்டன் பிலிம் ஸ்டுடியோ ஆகிய நிறுவனங்கள் மூடப்பட்டதன் விளைவாக வேலையிழந்த தொழிலாளிகள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : கோல்டன சினி ஸ்டுடியோ மூடப்பட்டதால் வேலையிழந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 200 ஆகும்.

[1978 மார்ச் 3

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, மூடப்பட்ட மில்கள் அல்லது ஸ்டுடியோக்கள் போன்ற எந்த நிறுவனமாக இருந்தாலும், தொழிலாளர்களாகவே அதை எடுத்து நடத்துவதற்கு முன் வந்தால், அரசாங்கம் அதற்கு அசிஸ்ட் பண்ணும், உதவி செய்யும், ஊக்குவிக்கும் என்று நம்முடைய கனம் முதலமைச்சரவர்கள் நல்ல ஒரு யோசனையை முன்னால் சொல்லியிருந்தார். இந்தக் குறிப்பிட்ட இரண்டு ஸ்டுடியோக்களுடைய தொழிலாளர்கள் அந்த ஸ்டுடியோக்களை எடுத்து நடத்துவதற்கே முன் வந்திருக்கிறார்கள். அதனுடைய நிர்வாகிகளும் அவர்களிடம் ஒப்படைக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அன்றைக்கு முதல் அமைச்சர் கொடுத்த வாக்குறுதியின்படி, தொழிலாளர்கள் அதை எடுத்து நடத்துவதற்கு வேண்டிய அசிஸ்டென்ஸ் கொடுப்பதற்குத் தயாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உமாநாத் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நிர்வாகிகளும் தொழிலாளர்களும் ஒருங்கிணைந்து நியாயமான முறையில் எப்படி இந்தப் படப்பிடிப்பு நிலையத்தை நடத்த முடியுமோ, அதற்கேற்ற திட்டங்களோடு அரசை அணுகினால் அரசு பரிசீலிக்கும்.

திரு ரா. உமாநாத் : தலைவரவர்களே, அவர்களுக்கு சம்பள பாக்கிகளும் பல பாக்கிகளும் இருப்பதனாலே, அன்எம்ப்ளாய்மென்ட் இருக்கும்போது அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, கனம் தொழிலாளர் நல அமைச்சரவர்கள் தலையிட்டு அந்தப் பாக்கிகளைக் கொடுப்பதற்கு ஏதாவது செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, கேள்வி அந்தப் படப்பிடிப்பு நிலையத்தைத் திறப்பதற்குத் தொழிலாளர்கள் பொறுப்பேற்று அதை நடத்துவதற்கு முன்வந்திருக்கிறார்கள் ; இந்த அரசு உதவி செய்யுமா என்பது. அதற்கேற்ப நாங்கள் பரிசீலிக்கிறோம் என்று சொன்னபொழுது பழைய பாக்கியைக் கொடுக்க முடியுமா என்று கேட்கிறார்கள். இந்தக் கேள்வி பொருத்தமா என்பதை பேரவைத் தலைவரவர்களே முடிவு செய்து கொள்வதோடு ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன், அந்தப் பிரச்சினை மிகப் பெரிய பிரச்சனை என்பது இங்குள்ள அனைவருக்கும் தெரியும், அவருக்கும் தெரியும்.

கொத்தடிமை முறை

* 374 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு அரிசனநலத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

இம்மாநிலத்தில் கொத்தடிமை முறை பூரணமாக ஒழிக்கப் பட்டு விட்டதா ?